**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 8** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்:** **திருமதி மாலினி சோமாஸ்கந்தன்**

**திருமதி மஞ்ச விஜயகுமார்**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 25 | |
| 2 | 15 | |
| 3 | 10 | |
| 4 | 15 | |
| 5 | 15 | |
| 6 | 20 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

1. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக. (25 புள்ளிகள்)**

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)*

*அன்றே மறப்பது நன்று"*

என்பது வள்ளுவர் கூறிய வாய்மொழியாகும். மனிதராகப் பிறந்த நாம் பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்து விடலாகாது. நாங்கள் என்றுமே தனித்து வாழ்ந்து விட முடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரதும் உதவியைப் பெறவேண்டியிருக்கும். அவ்விதமாக நாம் பெறும் உதவியை என்றுமே நினைத்திருக்க வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீமை செய்திருந்தால் அதனை நாம் உடனே மறந்துவிடவேண்டும்.

எமக்குச் செய்த உதவி பெரிதாக இருக்கலாம். சிறிதாகவும் இருக்கலாம். ஆனால் அவ்வுதவி தக்க தருணத்தில் செய்யப்பட்டதாக இருப்பின் அதனை இவ்வுலகைவிட பெரிதாக மதிக்க வேண்டுமென வலியுறுத்துகிறார் வள்ளுவர் பெருந்தகை.

*"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*

*ஞாலத்தின் மாணப் பெரிது"*

நன்றியை என்றும் போற்றும் சான்றோர் அதனைப் பெரிதாகவே மதித்து வாழ்வர். அந்நன்றிக் கடனுக்காகத் தம்மையே அர்ப்பணம் செய்யவும் துணிவர். "நன்றியைப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிது" என்று வாழ்பவர்கள் அவர்கள். அதனை வள்ளுவர் மேலும் விளக்குகிறார்.

*"தினைத்துணை நன்றி செயினும்*

*பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவர்"*

தினைக்கும் பனைக்கும் எத்தனை வித்தியாசம். செய்த உதவி தினையாக இருந்தாலும் அவ்வுதவியைப் பனையாகவே மனதிலே கொண்டமாந்தர் எம்மத்தியில் வாழத்தான் செய்கிறார்கள்.

நன்றி மறந்தவரை உலகம் "நன்றி கெட்டவர்" எனக் கூறிவிடும் எனப் பயந்து வாழ்ந்தவர் சிலர் உளர். அவர்கள் நன்றி மறந்தவர்களாகத் தாம் ஆகிவிடக்கூடாது என்பதற்காக அநீதியின் பக்கம் சாய்ந்தவர்களானார்கள். கர்ணன் அத்தகையவருள் ஒருவன். பாண்டவர் தன் தம்பியர் என அறிந்த பின்னரும் அவர்கள் பக்கம் சேரவில்லை. தன் நண்பனான துரியோதனன் செய்த உதவிக்காகத் செய் நன்றி மறவாத வீரனானான்.

பாரதத்தில் இப்பாத்திரம் போலவே இராமாயணத்தில் கும்பகர்ணன் வருகிறான். தனது தமையன் செல்வது அதர்மமான வழி என அவன் அறிந்திருந்தான். எனினும் செய்நன்றி மறவாது வாழ்வதே சிறந்த பண்பு என எண்ணி அண்ணனுக்காகப் போர்க்களம் செல்கிறான்; ஆவியும் துறக்கிறான்.

ஏகலைவனையும் நாம் மறந்து விடக்கூடாது. அவன் தனது குருவாக எண்ணியிருந்தவரே தன் கட்டைப் பெருவிரலைக் குருதட்சிணையாகக் கேட்க

சிறிதளவும் மனம்சோராமல் வெட்டிக் கொடுக்கிறான். அவனது மானசீகக் குருவாக மட்டுமே துரோணர் விளங்கினார். என்றாலும் நன்றியை அவன் மறக்கத் துணியவில்லை. ஏன் தெரியுமா? வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவன் அவன்.

*“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*

*செயந்நன்றி கொன்ற மகற்கு”*

1. எதனை மறக்கவேண்டும் என்றும் எதனை மறக்கக் கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்?

_______________________________________________

_______________________________________________

2. ஞாலத்தின் மாணப் பெரியது எது?

_______________________________________________

_______________________________________________

3. யாருக்கு உய்வில்லை என வள்ளுவர் கூறுகிறார்?

_______________________________________________

_______________________________________________

4. இந்த உரைப்பகுதிக்கு பொருத்தமான தலைப்பு எழுதுக.

_______________________________________________

5. நன்றிக்காகத் தம்மை அர்ப்பணம் செய்தவர்கள் என இந்த உரைப்பகுதியில் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. **கீழே தரப்பட்ட சொற்களை பாவித்து ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைக்கவும். (15 புள்ளிகள்).**

1. பொல பொல

2. வாழைப்பழம்

3. ஒலிம்பிக் போட்டி

4. மகிழ்ச்சி

5. செங்கோலாட்சி

6. ஆபரணம்

7. வாணிவிழா

8. மாலைப்பொழுது

9. ஆழமறியாது

10. மதித்தல்

3. **பின்வரும் விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக. (10 புள்ளிகள்)**

வெளிவந்து விட்டது.

சின்னஞ் சிறுவர்கள் விரும்பிப் படித்திடும் சிறுவர் சஞ்சிகை

**தமிழ் அமுது**

- இனிமைதரும் பாடல்கள்
- படித்து மகிழப் பாப்பாக் கதைகள்
- அழகான வண்ணப்படங்கள்
- கண்ணைக் கவரும் சித்திரக் கதைகள்

அனைத்தும் கொண்டது

எல்லா தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கும். இன்றே வாங்கிப் படியுங்கள்.

வெளியிடுவபர்கள்:
*தமிழ்க் கல்வி நிலையம்*
*சிட்னி, அவுஸ்திரேலியா*

1. இவ்விளம்பரத்தில் எதை வாங்கும்படி கூறப்படுகிறது?

___

2. தமிழ் அமுது எப்படியிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

___

___

3. எங்கே இச்சஞ்சிகையின் பிரதிகளைப் பெறலாம்?

___

___

4. இச்சஞ்சிகையை வெளியிடுபவர்கள் யார்?

___

5. எவர் இதனை விரும்பிப் படிப்பார்கள்?

___

___

4. **மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக. (15 புள்ளிகள்)**

1. செல்வன் வேகமாகத் தன்அறைக்குள் நுழைந்தான்.
   அவன் புத்தக அலமாரியைத் திறந்தான்.
   அவன் புத்தகத்தை எடுத்தான்.

2. கலா அதிகாலையில் எழுந்தாள்.
   அவள் காலைக் கடன்களை முடித்தாள்
   அவள் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

3. கண்ணன் நூல்நிலையத்திற்குச் சென்றான்.
   அவன் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினான்.
   அவன் அதைப் படித்தான்

4. குமரன் பேருந்து நிலையத்திற்குச் சென்றார்.
   அவர் பேருந்தில் ஏறினார்.
   அவர் வேலைக்குச் சென்றார்.

5. செல்வி பேச்சுப் போட்டியில் பங்கேற்றாள்.
   அவள் திறமையாகப் பேசினாள்.
   அவள் முதல் பரிசு பெற்றாள்.

5. எட்டாம் வகுப்பு மாணவர் சுற்றுலா செல்ல அனுமதி கேட்டு நீர் படிக்கும் பாடசாலை அதிபருக்கு 80 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக. இக்கடிதத்தில் ஏன், எங்கு, எப்படி போன்றவற்றைக் குறிப்பிடவும். (15 புள்ளிகள்)

6. **பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)**
   1. சிட்னியில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளால் மாணவர் அடையும் நன்மைகள்/தீமைகள்.
   2. நான் படித்துச் சுவைத்த புத்தகம்.